| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இறுதிஅறிக்கை தாக்கல்** | : | 15.09.2025 | **தீர்வளிக்கப்பட்டது** | : | 17.03.2026 |
| **புலன்கொள்ளப்பட்டது** | : | 19.09.2025 | **விசாரணை காலம்** | : | 5 மாதங்கள் 28 நாட்கள் |

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்

**முன்னிலை: N. கோபாலகிருஷ்ணன், B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1,**

**2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 17 –ம் தேதி செவ்வாய்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 610 /2025**

**CNR No. TNSA18– 000043–2025**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், நங்கவள்ளி **குற்ற எண். 197/2024 தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(a) உ/இ 4(1)(C)** **...புகார்தாரர்**

**–எதிர்–**

**கோபால் (62/2026) த/பெ.ஆறுமுகம்,** கள்ளியூர், பெரியசோரகை கிராமம், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம். **..எதிரி**

**<u>வழக்கு விசாரணை விவரங்கள்</u>**

( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:– R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021–ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர் சிறையில் இருந்த காலம் | : | இந்த வழக்கில் ஆகிய எதிரி கடந்த 02.10.2024ம் தேதியன்று காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு அன்றே பிணையில் விடுவிக்கப் பட்டார். |
| ii. | புகார் / இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 15.09.2025 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | : | 26.11.2025 |

<table>
<tr><td></td><td>(பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td></td><td colspan="3"></td></tr>
<tr><td>v.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 317–ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட</td><td>:</td><td colspan="3">_</td></tr>
<tr><td rowspan="4">vi.</td><td rowspan="4">சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம்</td><td rowspan="4">:</td><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>05.02.2026</td><td>05.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>19.02.2026</td><td>19.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>19.02.2026</td><td>19.02.2026</td></tr>
<tr><td>vii.</td><td>கு.வி.மு.ச. பிரிவு 313–ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி</td><td>:</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>viii.</td><td>குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்)</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>ix.</td><td>மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

இந்த வழக்கில் அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் **திரு. T. சுரேஷ்** அவர்கள் முன்னிலையாகி, எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. M.பாலசுப்ரமணி** அவர்களும் முன்னிலையாகி, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரீசிலணை செய்து இந்த நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

1. **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:** சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், **நங்கவள்ளி காவல்நிலைய எல்லைக்குட்ப்பட்ட, பெரியசோரகை கிராமம், கள்ளியூர்** அருகில் வசித்து வரும், இந்த வழக்கின் **எதிரி கோபால்** என்பவர், கடந்த **02.10.2024–ஆம் தேதி, 17.00 மணிக்கு**, தனது **வீட்டின் பின்புறம்** அரசு மதுபானங்களான **180மில்லி அளவுள்ள பிளாக் பிரேல் பிராந்தி 1, மெக்லென் பிராந்தி 3 பாட்டில்களை** அரசு அனுமதியின்றி அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்து **தமிழ்நாடு தடைச்சட்டம்(2024வது வருட திருத்த சட்டம்) பிரிவு 4(1)(C)–ன்** கீழ் குற்றம் செய்துள்ளதாக காவல் உதவி ஆய்வாளர் கடந்த **15.09.2025–ஆம்** தேதி தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கையின் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு இதுவாகும்.

2. இந்த வழக்கில் கடந்த **19.09.2025–ம்** தேதி, எதிரிக்கு எதிரான குற்றங்கள் புலன்கொள்ளப்பட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு **பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 230–ன் படி** வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கடந்த **16.10.2025ம்** தேதி இலவசமாக வழங்கப்பட்டது.

3. அதன் பின்னர் கடந்த **26.11.2026ம்** தேதி இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், **எதிரி தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(a) உ/இ 4(1)(C) ன் படியும்** குற்றச்செயல்களை செய்துள்ளார் என்று அனுமானிக்க தகுந்த முகாந்திரங்கள் உள்ளதாக கருதி, கீழ்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு படித்துக் காட்டி, விளக்கி கூறி, வினவிய போது, தான் குற்றவாளி அல்ல எனவும், வழக்கை விசாரிக்க விரும்புவதாகவும்

தெரிவித்துள்ளார்.

4. ஆகவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, இந்த வழக்கில் அரசு தரப்பில் **அ.சா. 1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. **அரசு தரப்பு சாட்சிகள் வாயிலாக அறியப்படும் வழக்கின் விபரம்:** கடந்த **02.10.2025–ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு, நங்கவள்ளி காவல்நிலைய அ.சா.3 உதவி ஆய்வாளர் ரவிக்குமார் என்பவர் தலைமையில், அ.சா.1 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணிமேகலன் மற்றும் அ.சா.2 சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அழகேசன்,** ஆகியோர் பெரியசோரகை கள்ளியூர் பகுதியில் ரோந்து சென்று கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அவரது வீட்டின் அருகில் இருந்த இந்த வழக்கின் **எதிரி கோபால்**, ரோந்து குழுவினரைப் பார்த்ததும், தப்பி ஓடியவரை, பிடித்து விசாரணை செய்துள்ளனர். விசாரித்த போது **எதிரி கோபால்** அவர் அரசு அனுமதியின்றி அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

6. மேற்படி ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் எதிரியை கைது செய்து, **மாலை 5.00 மணிக்கு** அவரிடமிருந்து **180மில்லி அளவுள்ள பிளாக் பிரேல் பிராந்தி –1, மெக்லென் பிராந்தி, 3 பாட்டில்களை** அ.சா.ஆ1 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, மேற்படி ரோந்து பணிக்கு அவருடன் வந்திருந்த **சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அ.சா.1 மணிமேகலன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 அழகேசன்** ஆகிய இருவரை சாட்சியாக வைத்து மேற்படி சான்று

பொருட்களை **அ.சா.3 காவல் உதவி ஆய்வாளர் ரவிக்குமார்** கைப்பற்றியுள்ளார்.

7. அதன் பின்னர் கைது செய்யப்பட்ட எதிரியை கைப்பற்றப்பட்ட சான்று பொருட்களுடன் காவல் நிலையம் அழைத்து வந்து, **நங்கவள்ளி காவல் நிலைய குற்ற எண். 197/2024 என்ற எண்ணில் தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவு 4(1)(C)–ன் கீழ்** வழக்கு பதிவு செய்து எதிரியை இரு நபர் பிணையில் விடுவித்துள்ளார்.

8. பின்னிட்டு மேற்படி கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் நங்கவள்ளி காவல் நிலைய மதுவிலக்கு குற்றங்களில் கைப்பற்றிய சொத்துக்களை சேர்த்து, கடந்த **2021 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 16ஆம் தேதி மதியம் 12:30 மணி முதல் 1.30 மணி வரை** அதிகாரிகளால், கொட்டி உடைத்து மண்ணில் குழி தோண்டி மூடி சான்று பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தின் நகல் சான்றிடப்பட்டு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. மேலும் மேற்படி வழக்கு சொத்துக்களை அளித்தது குறித்து உதவி ஆணையாளர் (கலால்) அவர்களுக்கு காவல் ஆய்வாளர் அளிக்கப்பட்ட பொருட்கள் குறித்து அ.சா.ஆ.4 அறிக்கை சமர்ப்பித்துள்ளார். இறுதியாக தனது புலன் விசாரணையை முடித்து, இந்த வழக்கின் எதிரி சின்னப்பையன் என்பவருக்கு எதிராக, அவர் **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவு 4(1)(C)–ன் கீழ்** குற்றம் செய்துள்ளதாக சம்பவத்தன்றே **02.10.2024–ஆம்** தேதி இறுதி அறிக்கையை தயார் செய்து இதை நீதிமன்றத்தில் **கடந்த 2025 ஆம் வருடம்**

**செப்டம்பர் மாதம் 15** ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

10. மேற்படி அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னர், கடந்த **12.03.2026ம்** தேதி அரசு தரப்பு சாட்சியங்களில், **பாரத குடிமக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 351(1)(b)–ன் படி** எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து, படித்துக்காட்டி விளக்கிக் கூறி கேள்வி கேட்ட பொழுது, அவற்றை பொய்சாட்சி என மறுத்து, அவரது தரப்பில் சாட்சி உள்ளது என தெரிவித்தார். ஆகவே எதிரி தரப்பு சாட்சி விசாரணை கடந்த **17.03.2026**ம் தேதி முடிக்கப்பட்டு எதிரி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

11. **இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய எழுவினா என்னவென்றால் அரசு தரப்பு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் ஆக்க கூறுகளை எந்தவித சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளதா என்பது ஆகும்.**

**சாட்சிய பகுப்பாய்வு மற்றும் முடிவு**

12. இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு, எதிரித்தரப்பில் எந்தவித சாட்சியங்களும், ஆவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை. ஆகவே அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்த வழக்கை தீர்மானிப்பதற்கான கீழ்கண்ட தொடர்பு பட்ட சங்கதிகள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

a) இந்த வழக்கில் சான்று பொருட்களை கைப்பற்றும் போது, தனி நபர் சாட்சியங்கள் யாரும் சாட்சிகளாக இருந்து கைப்பற்றப்படவில்லை.

இந்த வழக்கில் சாட்சியாக உள்ள மூன்று நபர்களுமே காவல்துறையைச் சேர்ந்தவர்கள்.

b) மேலும் இந்த வழக்கு சம்பந்தப்பட்ட கைப்பற்றுதல் மகஜரானது காவல்நிலைய கணிணி வலையமைப்பில் இயங்கும் CCTNS மென்பொருள் மூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இந்த வழக்கின் சாட்சிகள் தெரிவித்துள்ளவாறு, அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை.

c) மேலும் அவ்வாறு தயார் செய்யப்பட்ட **அ.சா.ஆ.1 கைப்பற்றுதல் மகஜர்** இந்த வழக்கின் குற்ற எண் இடம் பெற்றிருப்பதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது. எனவே அரசு தரப்பு வழக்கின்படி கைப்பற்றுதல் மகஜர் சம்பவத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு, அதன் பின்னிட்டு காவல் நிலையம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்ற சங்கதி பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

d) மேலும் எதிரியிடம் இருந்து மதுபானங்களை விலைக்கு வாங்கிய நபர்கள் யாரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும் **தமிழ்நாடு மதுபானங்கள் ( தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வைத்திருத்தல்) விதிகள், 1996, விதி எண்.2–ன்** படி ஒரு தனிநபர் தனது பயன்பாட்டுக்காக **4.50லிட்டர் இந்திய தயாரிப்பு மதுபானங்கள்** அல்லது வெளிநாட்டு தயாரிப்பு மதுபானங்களில் வகித்திருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் மொத்தம்

கைப்பற்றப்பட்டது நான்கு **180ML அளவுள்ள** பிராந்தி பாட்டில்களாகும். அவை மொத்தமாக **720 ML அளவே** கொண்டதாகும். அந்த அளவானது மேற்படி தனிநபர் பயன்பாட்டுக்கு வைத்திருக்ககூடிய அனுமதிக்கப்பட்ட அளவுக்கு உட்பட்டு வருவதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்றது.

e) மேலும் மேற்படி இந்த வழக்கின் எதிரி மதுபானங்களை அரசு அனுமதி இல்லாமல் விற்பனைக்கு வைத்திருந்தார் என்பதற்கான எந்த சாட்சிகளும், ஆவணங்களும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேலும், மேற்படி எதிரி அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்று வருவதாக தனி நபர் யாரும் புகார் கொடுத்ததாக அரசு தரப்பு வழக்கில் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே மேற்கண்ட சூழ்நிலையில், மேற்படி அனுமதிக்கப்பட்ட அளவு கொண்ட மதுபான பாட்டில்களை தன் வசம் தனது தனிப்பட்ட பயன்பட்டுக்காக வைத்திருப்பது சட்டப்படியாக தவறானதாகாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13. மேற்கண்ட முன்னும் பின்னும் முரண்பட்ட சாட்சியங்களாலும், எதிரி மதுபானங்களை விற்பனைக்காக வைத்திருந்தார் என்பதற்கான எந்த சாட்சியங்களும், ஆவணங்களும் இல்லாததாலும், அரசு தரப்பு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில், அவர்கள் கூறியபடி, இந்தச் சம்பவம் நடைபெறவில்லை என்பதும், மேலும் இந்த வழக்கிற்கான ஆவணங்கள் முறையாகத் தயாரிக்கப்படவில்லை என்பதும் தெளிவாக அறியப்படுகிறது.

14. மேலும் இந்த சூழ்நிலையில், எதிரி தரப்பில் தெரிவித்தவாறு, இந்த வழக்கானது புள்ளிவிவர கணக்கிற்க்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், அவசரகதியில் பதிவு செய்யப்பட்டது என்ற எதிர்வாதத்தின்படி நடந்து இருப்பதற்கு அதிகபட்ச சாத்தியக் கூறுகள் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது

## முடிவுரை

ஆகவே மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் இந்த வழக்கு **எதிரி கோபால்** என்பவருக்கு எதிரான **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(a) உ/இ 4(1)(C)–ன்** கீழான குற்றச்சாட்டு போதிய சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்மானித்து, இந்த வழக்கில் தீர்வளிக்கப்பட வேண்டிய எழுவினாவிற்கு அரசு தரப்புக்கு எதிராக இந்த நீதிமன்றம் விடையளிக்கிறது.

முடிவாக இந்த வழக்கின் **எதிரி கோபால்** என்பவர் **தமிழ்நாடு தடைச் சட்டம் பிரிவுகள் 4(1)(a) உ/இ 4(1)(C)–ன்** ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து **பாரத குடிமக்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 271(1)–ன்** கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

இந்த வழக்கில் சான்று பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் எனது சுருக்கெழுத்திற்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்து, சரிபார்க்கப்பட்டு, இன்று **2026ம் வருடம் மார்ச் மாதம் 17–ம் தேதி** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய

பகரப்பட்டு, எனது கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN Date: 2026.03.17 18:19:19 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அ. சா. 1 திரு.மணிமேகலன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்

அ. சா. 2 திரு.அழகேசன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்

அ. சா. 3 திரு. ரவிக்குமார், காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ. சா. ஆ.1 கைப்பற்றுதல் மகசர்

அ. சா. ஆ.2 கைப்பற்றுதல் மகசரிலுள்ள அ.சா.2 அழகேசனின் 2வது கையெழுத்து

அ. சா. ஆ.3 முதல் தகவல் அறிக்கை

அ. சா. ஆ.3 அழித்தல் ஆவணத்தின் சான்றிட்ட நகல்

அ. சா. ஆ.4 அழித்தல் ஆவணத்தின் அறிக்கை

**<u>அரசு தரப்பு சான்று பொருள் :– இல்லை</u>**

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–** இல்லை

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.03.17 18:19:08 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1 ,மேட்டூர்.**

**குறிப்பு**

1) தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) இவ்வழக்கில் சாட்சிகள் மூன்று முறைக்கு மேல் இந்த நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

**நகல்:–**

1) மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.